கல்வி மறுசீரமைப்பு மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில்,
மகாராஷ்டிரா, பூனே

நிபுன் பாரத் கற்றல் பயிற்சி ஆய்வு

வகுப்பு - 5 : பாடம் - சூழ்நிலைக் கல்வி பகுதி - 1

ஆசிரியர்களுக்கான பொது வழிமுறைகள்:

1. தேவையான படம் / வார்த்தை அட்டைகளை முன்கூட்டியே தயார் செய்ய வேண்டும்.
2. தேவைப்படும் இடங்களில் மாணவர்களுக்கு பத்தியை வாசித்து காட்ட வேண்டும்.
3. எழுத்துப் பூர்வமாக பதிலை எடுக்க வேண்டும் என்றால், அது மாணவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.
4. கேள்வி / படத்தை புரிந்து கொள்வதில் மாணவர்களுக்கு சிரமம் இருந்தால், ஆசிரியர் தகுந்த விளக்கத்தை அளிக்க வேண்டும்.

கற்றல் முடிவு எண் 1 : சுற்றுச்சூழலில் உள்ள பூக்கள், வேர்கள் மற்றும் பழங்களின் எளிமையான அம்சங்களை (உதாரணமாக வடிவம், நிறம், மணம், அவை வளரும் இடம் மற்றும் வேறு ஏதேனும்) கற்பவர் அடையாளம் காட்டுதல். பறவைகள் மற்றும் விலங்குகளின் அலகு / பற்கள், நகங்கள், காதுகள், முடி, கூடு / தங்குமிடம் போன்ற பல்வேறு அம்சங்களை கற்பவர் அடையாளம் காண்கிறார்.

கேள்வி : கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை தருக.

1) பின்வரும் விலங்குகளில் எது முட்டையிடுகிறது?



2) கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை சரியான முறைப்படி வரிசைபடுத்துக.





*Runa Graphics : Com1-\D\2022/28) Science\Student Papers\1) Std 5th \Proof-II\29-09-2022\T*

3 ) முட்டையிடுவது மற்றும் கன்றுகளை ஈன்றெடுப்பது என வகைப்படுத்தவும்.

யானை, வாத்து, ஆடு, குருவி, பூனை, சுவர் பல்லி.

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வ.எண் | வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1) | மூன்று கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தல் | 3 |
| 2) | ஏதேனும் இரண்டு கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல் | 2 |
| 3) | ஏதேனும் ஒரு கேள்விக்கு சரியாக பதிலளித்தல் | 1 |
| 4) | எந்த கேள்விக்கும் சரியாக பதிலளிக்கவில்லை | 0 |

எதிர்பார்க்கப்படும் பதில்கள் :

1) கோழி

2) 1.முட்டை 2.முட்டைப்புழு 3.கூட்டுப்புழு 4.முதிர்ந்த பட்டாம்பூச்சி

3) முட்டையிடுபவை - வாத்து, குருவி, சுவர் பல்லி
கன்றுகளை ஈன்றெடுப்பது - யானை, ஆடு, பூனை

---

கற்றல் முடிவு எண் 2 : தினசரி தேவைகளை (உதாரணமாக உணவு, நீர், ஆடைகள்) அதாவது மூலத்திலிருந்து வீட்டிற்கு உற்பத்தி செய்து வாங்கும் செயல்முறையை கற்பவர் கற்றல்.

---

கேள்வி : கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடை தருக.

1) பின்வரும் பொருள்களில் எலுமிச்சை பழ சர்பத் செய்ய தேவையானது எது?
(சர்க்கரை, எண்ணெய், மஞ்சள், மிளகு, எலுமிச்சை, வெங்காயம், உப்பு, நீர்)

2 ) பின்வரும் பொருள்கள் எங்கிருந்து கிடைக்கின்றன என்பதை பொருத்தவும்.

ஆசிரியர் குறிப்பு : கொடுக்கப்பட்ட வார்த்தைகளின் அட்டைகளைத் தயாரித்து, ஜோடிகளைப் பொருத்த மாணவர்களிடம் கேளுங்கள்.

உப்பு

கரும்பு

தேக்குமரம்

வயல்

காய்கறிகள்

கடல்

காடு

பண்ணை



*Runa Graphics : Com1-\D\2022/28) Science\Student Papers\1) Std 5th \Proof-II\29-09-2022\T*

3 ) பின் வரும் படங்களை சரியான முறைப்படி வகைப்படுத்துதல்.

ஆசிரியர் குறிப்பு : கொடுக்கப்பட்ட படங்களின் அட்டைகளை உருவாக்கி அவற்றை ஒழுங்கான வரிசையில் அமைக்குமாறு மாணவர்களிடம் கூறவும்.

|  |  |  |
|---|---|---|
| உழுதல் | கதிரடித்தல் / தூற்றுதல் | அறுவடை |
|  |  |  |
| விதைத்தல் / நடுதல் | பயிர் செய்தல் | சாக்குகளில் நிரப்புதல் |

4 ) கோதுமை சாக்கில் இருந்து சப்பாத்தி வரை, கோதுமையின் பயனை விவரிக்கவும்.

எதிர்பார்க்கப்படும் பதில்கள் : 1) நீர், சர்க்கரை, எலுமிச்சை, உப்பு

2) உப்பு - கடல், கரும்பு - வயல் / பண்ணை, காய்கறிகள் - வயல் / பண்ணை, தேக்கு மரம் - காடு

3) உழுதல், விதைத்தல், நடுதல், பயிரிடுதல், அறுவடை, கதிரடித்தல் / தூற்றுதல், பொதியிடுதல்

4) தானியங்களை தேர்ந்தெடுப்பது - சுத்தம் செய்தல் - மாவாக்கல் - மாவை பிசிதல் - பந்து போல் உருவாக்கல் - உருட்டுதல் - சப்பாத்தியை வேக வைத்தல்.

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வ.எண் | வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1) | நான்கு கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தல் | 3 |
| 2) | ஏதேனும் மூன்று கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல் | 2 |
| 3) | ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு கேள்விக்கு சரியாக பதிலளித்தல் | 1 |
| 4) | எந்த கேள்விக்கும் சரியாக பதிலளிக்கவில்லை | 0 |



*Runa Graphics : Com1-\D\2022/28) Science\Student Papers\1) Std 5th \Proof-II\29-09-2022\T*

கற்றலின் முடிவு எண் 3 : விலங்குகளின் நடத்தை கூட்டம் / குழு (எறும்புகள், தேனீக்கள், யானைகள்) பறவைகளின் நடத்தை (கூடுகள் கட்டுதல்) குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் (உதாரணமாக பிறப்பு, திருமணம், இடமாற்றம் போன்றவை) கற்பவர் விளக்கல்.

ஆசிரியர் குறிப்புகள் : முதலில் ஆசிரியர் பின்வரும் பத்தியை மாணவர்களிடம் படித்துக் காட்டி, கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளை கேட்க வேண்டும்.



ஒரு மகிழ்ச்சியான குடும்பத்தில் ரமேஷும், ராதாவும் வசித்து வருகின்றனர். ரமேஷ்க்கு பூனம், ராகுல் என இரண்டு குழந்தைகள் இருந்தனர். பூனம் அவளது கல்வியை முடித்துவிட்டு வேலைக்காக அமெரிக்கா சென்றாள். ராகுலும் தனது கல்வியை முடித்துவிட்டு சொந்த தொழிலை தொடங்கினான். இறுதியாக அவன் சவிதாவை திருமணம் செய்தான். இதற்கிடையில் ரமேஷின் தகப்பனார் வயது முதிர்வு காரணமாக இறந்ததால், அவர் மன உலைச்சலில் உள்ளார். ஆனால் ரமேஷின் வீட்டிற்கு ராகுலின் குழந்தை வருவதால் மீண்டும் சந்தோசம் வருகிறது.

1. தொடக்கத்தில் ரமேஷின் குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தனர்?
2. ரமேஷின் குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை என்றும் அப்படியே இருந்ததா?
3. ரமேஷின் குடும்பத்தைப் போலவே சமூகத்தில் உள்ள மற்ற குடும்பங்களின் எண்ணிக்கி மாறுபடுமா?
4. ரமேஷின் குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை எக்காரணத்தால் மாறியது?

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வ.எண் | வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1) | நான்கு கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தல். | 3 |
| 2) | ஏதேனும் மூன்று கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல். | 2 |
| 3) | ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு கேள்விக்கு சரியாக பதிலளித்தல். | 1 |
| 4) | எந்த கேள்விக்கும் சரியாக பதிலளிக்கவில்லை. | 0 |



*Runa Graphics : Com1-\D\2022/28) Science\Student Papers\1) Std 5th \Proof-II\29-09-2022\T*

எதிர்பார்க்கப்படும் பதில்கள் :

1) ஆறு

2) இல்லை

3) ஆம்

4) இடமாற்றம், திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு

---

கற்றல் முடிவு எண் 4 : கற்பவர் விலங்குகள், பறவைகள், தாவரங்கள், பொருள்கள், கழிவுப் பொருள்களைக் காணக்கூடிய சிறப்பு அம்சங்களை (உதாரணமாக தோற்றம் மற்றும் பயன்பாடுகள் போன்றவற்றை) குழுக்களாக உருவாக்குதல்.

---

கேள்வி : கீழ்க்காணும் கேள்விகளுக்கு விடை தருக.

1) பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ள பழங்கள் மகாராஷ்டிராவில் எந்த முக்கியமான இடங்களில் கிடைக்கும் என்பதை குறிக்கவும்?

| | | |
|---|---|---|
|  சப்போட்டா |  மாம்பழம் |  வாழைப்பழம் |

| | |
|---|---|
|  திராட்சை |  ஆரஞ்சு |



*Runa Graphics : Com1-\D\2022/28) Science\Student Papers\1) Std 5th \Proof-II\29-09-2022\T*

2) மாதம் மற்றும் சுற்றியுள்ள நிகழ்வுகளை பொருத்துக.

ஆசிரியர் குறிப்பு : கொடுக்கப்பட்ட பட அட்டைகளை உருவாக்கி, ஜோடிகளை பொருத்த மாணவர்களிடம் சொல்லவும்.




3) ஸ்வராளி மழை நாள் சுற்றுலா செல்ல விரும்புகிறாள். அவளுக்கு நீ என்ன அறிவுரை கூறுவாய்?

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வ.எண் | வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1) | மூன்று கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தல் | 3 |
| 2) | ஏதேனும் இரண்டு கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல் | 2 |
| 3) | ஏதேனும் ஒரு கேள்விக்கு சரியாக பதிலளித்தல் | 1 |
| 4) | எந்த கேள்விக்கும் சரியாக பதிலளிக்கவில்லை | 0 |

எதிர்பார்க்கப்படும் பதில்கள் :

1) சப்போட்டா - கோல்வாட், மாம்பழம் - கொங்கன், தேவ்காட், இரத்தனகிரி மற்றும் பல..

வாழைப்பழம் - ஜல்காவ், திராட்சை - நாசிக்,ஆரஞ்சு - நாக்பூர்.

2) பிப்ரவரி - இது வெப்பமாகிறது.

மார்ச் - நாம் வெப்பத்தை உணர ஆரம்பிக்கின்றோம். குயில் சத்தம் பல இடங்களில் கேட்கிறது.

ஏப்ரல் - மே - சந்தையில் மாம்பழம், தர்பூசணி, நாவற் பழங்கள் மிகுந்து காணப்படுகின்றன.

ஜூன் - கருமேகங்கள் தோன்றுகின்றன.

3) குடையை எடுத்துச் செல்லல், மழைக் கோர்ட் அணிதல், மழைக் காலணிகளை அணிதல், உணவுப் பொருள்களை காற்று புகாத பாத்திரத்தில் எடுத்துச் செல்லல், குடிக்க தண்ணீர் எடுத்துச் செல்லல், வழுக்கும் பரப்புகளில் கவனமாக செல்லல், எல்லோருடன் இணைந்திருத்தல். இவற்றில் ஏதேனும் சரியான பதிலை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கற்றல் முடிவு எண் 5 : கற்றவர் நிலையான மற்றும் உள்ளூர் அலகுகளில் உள்ள அம்சங்களை யூகித்தல் (உதாரணமாக கிலோ, காஸ், பாவ் போன்றவை) உண்மையை சரிபார்த்து, மதிப்பிடப்பட்ட இடம் சார்ந்த அளவுகள் (நீளம், எடை, நேரம், காலம்) பற்றி கணித்தல்.

ஆசிரியர் குறிப்புகள் : கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை காண்பித்து மாணவர்களிடம் கேள்வியை கேட்டல்.

கேள்வி : பின்வரும் படத்தின் உதவியுடன் காற்றில் உள்ள தனிமங்களின் விகிதங்கள் காட்டப்பட்டுள்ளன. நன்கு கவனித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.




1) காற்று பல வாயுக்களின் கலவை என்று நினைக்கிறாயா? ஏன் அப்படி நினைக்கிறாய்?

2) காற்றின் மிகப்பெரிய பகுதியை எந்த வாயு ஆக்கிரமித்துள்ளது?

3) காற்றில் ஐந்தில் ஒரு பங்கு ஆக்சிஜன் உள்ளது என்ற கூற்று சரியானதா?

4) ஆக்ஸிஜனை எரித்தல் மற்றும் சுவாசிப்பதனால் ஏதேனும் பயன் இருக்கிறதா?

எதிர்பார்க்கப்படும் பதில்கள் :

1) ஆம். ஏனெனின் இது ஆக்ஸிஜன், நைட்ரஜன் மற்றும் பிற வாயுக்களின் கலவையாகும்

2) நைட்ரஜன்

3) ஆம்

4) ஆம்

மதிப்பீட்டிற்கான வரையறைகள் :

| வ.எண் | வரையறைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 1) | நான்கு கேள்விகளுக்கும் சரியாக பதிலளித்தல். | 3 |
| 2) | ஏதேனும் மூன்று கேள்விகளுக்கு சரியாக பதிலளித்தல். | 2 |
| 3) | ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு சரியாக பதிலளித்தல். | 1 |
| 4) | எந்த கேள்விக்கும் சரியாக பதிலளிக்கவில்லை. | 0 |

■■■



*Runa Graphics : Com1-\D\2022/28) Science\Student Papers\1) Std 5th \Proof-II\29-09-2022\T*